
SAINT EULALIA
December 10

# *புனித யுலாலியா*

இவள் ஸ்பெயின் நாட்டில் 304-ஆம் ஆண்டையொட்டி பிறந்தாள். தியோக்ளேசியான் என்ற பேரரசன் கிறிஸ்தவர்களை துன்புறுத்தி வந்தான். அவனுடைய பிரதிநிதியான தேசியன் நீதியாசனத்தில் அமர்ந்திருந்தான். சிறுமி அவனை அணுகி, “ஊமை உருவங்களை கடவுளாக வணங்கலாமா? உமது தெய்வங்களெல்லாம் உயிரற்றவை” என்று மக்கள் முன் கூறினர். தேசியன் அவளை நோக்கி, “தெய்வங்களுக்கு பலியிட்டு, உன்னை சாவிலிருந்து காப்பாற்றிக்கொள்” என்றான். நம் சிறுமியோ, “நான் கிறிஸ்தவள். நீர் சொன்னதைச் செய்ய முடியாது” என்றாள். அவன் அவளை நன்கு அடிக்கச் செய்தான். இரத்தம் வடித்துக்கொண்டிருந்த அவளை அதிகாரி முன் கொண்டு வந்தார்கள். “பெண்ணே பிடிவாதமாக இராதே. எங்கள் தெய்வங்களுக்கு பலி செலுத்துவாயானால் வேதனைப்பட மாட்டாய்” என்று அதிகாரி கூற அவள் “என் உடல் மீது உங்களுக்கு அதிகாரம் உண்டு. என் ஆன்மாவோ கடவுளுக்குச் சொந்தம். உங்கள் தெய்வங்களை நான் வணங்கவே மாட்டேன்” என்றாள். அதிகாரி அவளை சந்தை கூடும் இடத்திற்கு இழுத்துக் கொண்டு போய், அவளை தடிகளால் அடிக்கச் சொன்னான். நெருப்பில் எரிக்க உத்தரவிட்டான். அவளது தைரியத்தைக் கண்டு அநேக அவிசுவாசிகள் மனந்திரும்பினார்கள்.

**சிந்தனை:**

உடலை மாத்திரம் கொல்லக் கூடியவர்களுக்கு நாம் பயப்படலாகாது. உடலையும் ஆன்மாவையும் நரகத்தில் தள்ளக்கூடிய கடவுளுக்கே பயப்பட வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, எங்கள் ஆன்மாவின் விரோதிகளுக்கு நாங்கள் அதிகமாய் பயப்பட உதவி செய்யும்.